உ
சிவமயம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும்
கோட்டைக்காடு மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் கந்தசாமி மாணிக்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

09.04.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நெடுவானம் பொழி நீராய்
விழித்திரையில் தினம் முட்ட
படுமரமாய் நீ வீழ்ந்து
பாடை ஏறி நீறானாய்
வாடும் எம் மனங்கள்
வையம் உள்ள வரை
தேடும் உன் முகத்தை
ஏடும் உனக்காக
எழுத்தும் உனக்காக
ஓடும் கண்ணீராய்
உன்பாதம் வைக்கின்றோம்.





**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# கந்தசாமி மாணிக்கம்
## அவர்கள்

மலர்வு
10.03.1942

உதிர்வு
10.03.2015

### திதி வெண்பா

ஜெகம் போற்றும் ஜய வருடம் மாசி மாதம்
சதுர்த்தி திதியன்று சுவாதி நட்சத்திரமதில்
மாசில்லா மாணிக்கம் - மா மக்கள்
மனம் நெகிழ சென்றாளே சாளம்பையான் பாதம் நாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



## விநாயகர் வணக்கம்

தேள் என் செயும் தீண்டிய விசம் தான் என் செயும்
தோள் என் செயும் கொடுங் கோல் தான் என்செயும்
வினை என் செயும் செய்வினை தான் என் செயும்
வேழ முகத்தான் என உள்ளத்தில் வீற்றிருக்கையிலே

## தேவாரம்

பெற்றதாய் தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவியவுடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சங் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது கலை மறந்தாலும்
நற்றவத்த வருள்ளிருந்தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியப் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

தீராப்பிணி தீர சீவாத் துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறை சேயே பாலாக் கிரிராச
பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமாளே

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பை
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க சீரடியா ரெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தசாமி மாணிக்கம்

## அவர்களின்

# வாழ்க்கைச் சுவடுகள்

ஈழத் திருநாட்டில் வரலாற்றுப் புகழ் மிக்க பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டு விளங்கும் யாழ் குடா நாட்டின் எழில் மிக்க சிற்றூராகிய நீர்வேலி எனும் கிராமத்தில் சின்னவன் தெய்வானை தம்பதியினருக்கு 10ம் திகதி பங்குனி மாதம் 1942ம் ஆண்டில் 4வது கடைக்குட்டியாக மாணிக்கம் அவர்கள் அவதரித்தார்.

காலம் சென்ற இரத்தினம், இராசதுரை, ஐயாத்துரை ஆகியோர் அன்னாரின் உடன்பிறந்த சகோதரர்களாவார். அன்னார் வீட்டிற்கு இளையவராக இருந்ததால் அவ்வூர் மக்களால் "சின்னக்கா" என செல்லமாக அழைக்கப்பட்டார். அதற்கேற்றாற்போல் அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும் மென்மையான மனம் கொண்டவராக உறவினர்களுடனும், சுற்றத்தார்களுடனும் இன்முகம் காட்டி பழகி வந்தார். அன்னார் இளமைக் காலத்தில் தனது கல்வியை யா/நீர்வேலி CCT தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றார். இவர் திருமண வயதினை எய்யு முன்பே இவரது நற்குணத்தை அறிந்த மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த பூதர் வள்ளி தம்பதியினரின் புதல்வனாகிய கந்தசாமி (பிரபல மெக்கானிக்) 1957 இல் தனது வாழ்க்கைத் துணை வியாக இணைத்துக் கொண்டார். குடும்பத்திற்கேற்ற குலவிளக்காக இல்லற வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்.

செழிப்பு மிக்க ஊராகிய கோட்டைக்காடு மல்லாகத்தில் சாளம்பை முருகன் பின் வீதியுடன் இணைந்த நிலப்பரப்பில் தனக்கென ஒரு இல்லமமைத்து எல்லா வசதிகளுடனும் 8 பிள்ளைகளுடனும் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வந்தார். திருவிழாக் காலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் சாளம்பை முருகன் வீதியுலா வரும் போதெல்லாம் 12 நாட்களும் தவறாது மாலையிட்டு பிரசாதம் வழங்குவதிலும் பிரியமுடையவர்.

செல்வநாயகி, சத்தியநாதன் (சுவிஸ்), சறோஜாதேவி, சிவநாதன் (சுவிஸ்), நிர்மலாதேவி (D.r, J.P), ஜோதீஸ்வரன் (கனடா), லோகேஸ்வரி (ஜேர்மன்), பரமேஸ்வரி (லண்டன்) ஆகியோரைப் பிள்ளைச் செல்வங் களாக பெற்றெடுத்தார். தமது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கும், கல்விக்காகவும் கணவரை விட அதிக அக்கறை காட்டி மெழுகு வர்த்தியாக தமை உருக்கி இரவு பகல்பாராது வளர்த்து வந்தார்.

சொத்து சேர்ப்பதிலும் தன் பிள்ளைகளுக்கு நல்வாழ்க்கைத் துணை தேடுவதிலும் மிகுந்த அக்கறை காட்டினார். தான் கற்றது கைமண்ணளவாயினும் தனது பிள்ளைகள் கடலளவு கற்கவேண்டு மென்று பெரிதும் விரும்பி எல்லோரும் தாம் விரும்பிய கல்வியைக் கற்க உறுதுணையாக இருந்தார். ஐவரை அந்நிய நாட்டிற்கு அனுப்பி மூவரை தனதருகில் வைத்து சிறப்புடன் வாழ்ந்து வந்தார். தனது பிள்ளைகளின் வாழ்க்கைத் துணைகளாக சங்கரலிங்கம், அரியமலர் (சுவிஸ்), சூரியகுமார், சிவமலர் (சுவிஸ்), பழனி (இலங்கை மின்சாரசபை), றோஷனா (கனடா), லலித்குமார் (ஜேர்மன்), சுகுமார் (லண்டன்) என்போரை இணைத்து வைத்தார். மருமக்கள் எல்லோரையும் மருமக்கள் எனபாராது தனது பிள்ளைகள் போலவே அன்புடன் பார்த்து வந்தார். அன்னாரின் பேரப்பிள்ளைகள் சர்மிளா (லண்டன்), சஜீபன் (சுவிஸ்), அமீரன், சகீரன், சாருணி, மதுசன், தேனுஜா, தரன்சிகா, சந்தோஷ், றதுர்ஷன், விதுர்ஷன், யதுர்ஷன், றுதாங்கன், சஞ்சய், பிரவீன், யஸ்வின், அஷ்வின், அபியா, லுஜன், பபிஷன், யுதிகா ஆவர். பேரப் பிள்ளைகளான சர்மிளாவின் துணைவர் தயாபரன் (லண்டன்), சஜீபனின் துணைவி கஜந்தினி (சுவிஸ்), மதுசனின் துணைவி வேஜினிகா என்போரு மாவர். அன்னார் பூட்டப்பிள்ளைகளான லிதுஷா, மானஷா, லுக்ஷன் ஆகியோரையும் தூக்கி மடியில் வைத்து சீராட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் சுவிஸ், லண்டன், இந்தியா ஆகிய அந்நிய நாடுகளுக்கு தன் கணவருடன் இணைந்து சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார். அந்நியநாட்டிலிருக்கும் தனது பிள்ளைகள் தத்தமது குடும்பத்தினருடன் ஊரிற்கு வரப்போகின்றார்கள் என்று அறிந்தவுடன் மகிழ்ச்சியுடன் வீட்டை அலங்காரம் செய்வதிலும், சுத்தம் செய்வதிலும் சுறுசுறுப்பானவர். தனக்கு வருத்தம் ஏற்பட்டாலும் கூட "அது ஒன்றுமில்லை" என்று கூறி தனது வேலைகளைத் தானே செய்து முடிப்பார். எப்போதும் சத்தமாக கதைக்கும் சுபாவம் கொண்டு வீட்டை கலகலப்பாக வைத்திருப்பார்.

தனது கணவரை வயதான காலத்திலும் உணவு, மருந்து என்பவற்றை தனது கையாலே அளித்து சிறுபிள்ளை போல் பார்த்து வந்தார். இருவரும் காரில் சேர்ந்து திரிந்த நாட்களே அதிகம். ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருப்பதேயில்லை.

இவ்வளவு சந்தோசமாக வாழ்ந்திருக்கையில் 10ம் திகதி பங்குனி மாதம் 2015ம் ஆண்டு செவ்வாய்க்கிழமையன்று அதிகாலை 2.30 மணியளவில் அன்னார் எல்லோரையும் விட்டு தனிமையில் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் நினைவுகள் எங்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சாளம்பை முருகப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர் புலம்பல்

அன்போடு அரவணைத்து
ஆறுதல் மொழி பேசி
இன்பமாய் வாழ்ந்திருந்தோமே
துன்பங்கள் வந்த போதும்
துயரங்களில் நின்ற போதும்
இணைபிரியாதிருந்தோமே
தோள்கள் வலுவிழந்த போது
தோள்களிலே தாங்கி வந்தேன்
நா தளர்ந்த போது
உன் குரலாகத்தானே நானிருந்தேன்
நீ போன பின்பு
நான் மொழியிழந்து போனேன்
விழியிழந்து போனேன்
எனக்கு எல்லாமுமாய் நீ நின்றாயே
இப்போது இல்லாமற் போனாயோ....

காற்றுக்கு எதிராகப் போராடிய பிறகே
பட்டங்கள் உயரச் சென்று பறக்கின்றன
கஸ்டங்களை எதிர்த்துப் போராடுகிறவர்கள்
பட்டங்களைப் போல வாழ்வில் உயர்வார்கள்.

– வின்ஸ்டன் சர்ச்சில் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் புலம்பல்

அம்மா அம்மா என்று அழைத்த
எங்கள் குலதெய்வம் எங்கே?
கண்டவர் மகிழ
கண்களாய் வளர்த்தீர்கள்
அன்பு பண்பு ஒழுக்கம் கல்வி
அத்தனையும் தந்து
தந்தையாய் தாயதய் இருந்தீர்கள்
நீங்கள் பட்ட கஸ்டங்கள்
சொல்லி மாளாது
எங்களுக்காய் பட்ட கஸ்டங்கள்
தான் இவை அம்மா
எங்களை விட்டுப் போக
எப்படித்தான் மனம் வந்ததோ?
உங்கள் திருமுகம் காணாமல் தவிக்கின்றோம்
இங்கு எல்லோரையும் ஆளாக்கி
மகிழ்ச்சி கண்டீர்கள்
நாங்கள் மனம் வாடினால்
நீங்கள் படும் துன்பம் நாமறிவோம்
நீங்கள் இங்கு இல்லையே எனும் போது
நாங்கள் வாழ்வதா என்று தான்
எண்ணத் தோன்றுகிறது
எங்கள் பெயர் கூப்பிட
நீங்கள் இல்லையே
எம்மை விட்டுப் போய் விட்டீர்கள் எனும் போது
கண்ணீர் தான் வருகிறது
இன்னொரு பிறப்புண்டாயின்
மீண்டும் எங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவாக வரவேண்டும்
என்றும் உங்கள் பிள்ளைகளாக
நாம் வாழ்வோம்.

## மருமக்கள் புலம்பல்

மாமி மாமி என்று
அன்பொழுக அழைத்தோம்
எங்கள் மாமி எங்கே?
என்று எண்ணித் தவிக்கின்றோம்
இப்படி ஒரு மாமி கிடைப்பாரா?
என்று தான் கலங்குகிறோம் மருமக்கள் என்றாலும்
மக்கள் போல் பார்த்தீர்கள்
பார்க்க வந்தால் சாப்பிட்டீர்களா?
எங்கே பிள்ளைகள்
கவனம் கவனம் என்று
எங்களைக் கண்ணுக்குள்
வைத்தீர்கள் எங்கள்
கண்ணுக்குள் நிறைந்து
காணாமல் போய் விட்டீர்கள்
கலங்குகின்றோம் கனக்கிறது இதயம்
உங்கள் ஆத்மா
சாந்தியடைய வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்கு நாம் சென்றாலும்
வாசலிலே நின்று அன்புடனே
கவனம் கவனம் என்று
சொல்லி அனுப்புவீர்கள்
என்னுடைய பேரப்பிள்ளைகள்
என்று ஆதரிப்பீர்கள்
கையில் காசு தந்து விடுவீர்கள்
இன்று ஒரு வார்த்தை கூறாமல் சென்று விட்டீர்கள்
இனி உங்களை எங்கே காணலாம் அப்பம்மா
உங்களை வீட்டில் காணாமல்
வீடு வெறிச்சோடிக்கிடக்கிறது
கண்ணீர் தான் வருகிறது அப்பம்மா.

## பெறாமக்கள் புலம்பல்

சின்னக்கா என்று உவகை
கண்டோம் உங்களால்
எங்கள் பெற்றவரை
உங்கள் திருமுகத்தில் கண்டோம்
எத்திசையில் நாம் இருந்தோம்
என்ன ஏது என்று
விசாரித்து விடை கொடுத்தீர்கள்
குஞ்சாச்சி என்று சொன்ன
மறுவார்த்தைக்கு மீண்டும்
ஒரு குஞ்சாச்சி சொல்ல வைப்பீர்கள்
இன்று நீங்கள் எங்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையெனும் போது
எம்மையறியாமல் கண்ணீர் வழிகிறது.
உங்களைப் போல் ஒரு குஞ்சாச்சி
எம் பிறப்பில் மீண்டும் கிடைப்பாரா?
உங்கள் ஆத்ம சாந்தியடைய வேண்டுகிறோம்.

## உறவினர்கள் புலம்பல்

யாவருக்கும் சின்னக்காவாகவும் அக்காவாகவும்
அன்பு தந்து ஆறுதல் தந்த
உங்கள் முகத்தை
மறக்க முடியுமா?
மலர்ந்த சிரிப்போடு எம்மையும்
மகிழ வைத்தீர்கள்
வந்த போதெல்லாம்
வாயாரக் கதை பேசி
வயிலாற உணவு தந்து
கையிலும் இருப்பதை தந்து
போட்டு வா என்று
புன்னகையோடு அனுப்பி வைத்தீர்கள்
உங்கள் இடத்தில் யார்
இருப்பார் இனி
வாசல் வந்து உங்களைக் கண்டாலே போதும்
இருந்த துன்பம் பஞ்சாய்ப் பறந்து விடும்.
ஆறாமுடியவில்லை.
நோயென்றும் படுக்கையென்றும் இல்லாமல்
பரமனடி சென்றீர்கள்
நீங்கள் அமைதி பெற ஆண்டவனை வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக்காப்பு



முன் நின்று செய்யுள் முறையாய் புனைதற்கு
என் நிறை ருள்செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற் குற்றமொடு பொருட் குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற் கா

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவீர்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாரேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலு ளோரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்களியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01) மணமற்ற பூக்கள்
போகன்வில்லா (கடதாசிப் பூக்கள்), அந்தூரியம், தென்னை, பனை, சோளம், நெல்

02) இலைகள் மூலம் பதியமுறை இனப் பெருக்கம் செய்யும் தாவரங்கள்
சதைகரைச்சான், பெப்ரோமியா, பெகோணியா
ஆபிரிக்கன்வைலட்

03) அதிகளவு புரதச்சத்தைக் கொண்ட பழம்
விளாம்பழம்

04) மிகப்பெரிய இலையைக் கொண்ட தாவரம்
இராட்சத நீர் அல்லி

05) மிக நீண்ட காலம் உயிர்வாழக்கூடிய வித்து
தாமரை (1050 ஆண்டுகள்)

06) பூச்சிகளை உணவாக உட்கொள்ளும் தாவரங்கள்
கொண்டித்தாவரம்(நெப்பந்தீஸ்) துரோசீரா யூற்றிக்குளோரியா
கிளிச்சாடிச்செடி (சானீசியாடைட்டாசினா)

07) பூக்காத தாவரங்கள்
மடுப்பனை பன்னத்தாவரம், பாலித்தாவரம்

08) குட்டியீன்று பாலூட்டும் பறவை
வௌவால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) குட்டியீன்று பாலூட்டும் மீன்கள்
திமிங்கிலம், சுறா

10) முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து பாலூட்டும் விலங்குகள்
பிளாற்றிப்பசு, எறும்புண்ணி

11) வேகமாக ஓடக்கூடிய பறவை
தீக்கோழி

12) பறக்க முடியாத பறவைகள்
கிவி, பென்குவின், தீக்கோழி

13) மிகப்பெரிய முட்டையிடும் பறவை
தீக்கோழி

14) மிக வேகமாக ஓடும் விலங்கு
சிறுத்தை

15) மிக அதிக வருடங்கள் உயிர் வாழும் பிராணி
ஆமை

16) அடைகாக்கும் ஆண் பறவை
பென்குவின்

17) இலங்கை ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வதிவிடம்
ஜனாதிபதி மாளிகை

18) இலங்கை பிரதமரின் உத்தியோக பூர்வ வதிவிடம்
அலரி மாளிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) இலங்கை சபாநாயகரின் உத்தியோக பூர்வ வதிவிடம்
மும்தாஜ்மகால்

20) இலங்கையில் அதிகளவு சனத்தொகை கொண்ட சிறிய மாவட்டம்
கொழும்பு

21) இலங்கையில் நிலப்பரப்பில் கூடிய பெரிய மாவட்டம்
அனுராதபுரம்

22) உலகில் கடல் மட்டத்திற்குக் கீழேயுள்ள நாடு
நெதர்லாந்து

23) அத்திலாண்டிக் சமுத்திரத்தைச் சூழவுள்ள நாடுகளைத் தாக்கும் சூறாவளிகள்
கத்ரீனா, ரீட்டா, வில்மா

24) முதன் முதலில் முத்திரை வெளியிட்ட நாடு
இங்கிலாந்து (1840)

25) உலகில் நாணயத்தைப் பயன்படுத்தாத நாடு
பராகுவே

26) உலகில் மிகப்பெரிய ஒளி ஒலி பரப்பு செய்தி நிறுவனம்
சி.என்.என்(C.N.N) (அமெரிக்கா)

27) சூரியன் மறையும் நாடு
இங்கிலாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28) சர்வதேச குற்றவாளியைக் கைது செய்ய உதவும் பன்னாட்டு பொலிஸ் அமைப்பு
இன்ரப்போல்

29) உலகில் ஒரே கண்டமாகவும் நாடாகவும் இருப்பது
அவுஸ்ரேலியா

30) யூதமதம்,இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவற்றிற்கு புனித தலமாக விளங்குவது
ஜெருசலேம் தேவாலயம்

31) அமெரிக்கா ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வதிவிடம்
வெள்ளை மாளிகை

## எமது சுற்றாடலில் வசிக்கும் விலங்குகள் உட் கொள்ளும் மூலிகைத் தாவரங்கள்

01) பூனை – வயிற்றுக்கோளாறு ஏற்படும்போது குப்பைமேனித் தாவரத்தை உட்கொள்ளும்.

02) நாய் – வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படும்போது பால் அறுகினை உட்கொள்ளும்.

03) கீரி – பாம்புடன் சண்டையிட்ட பின்னர் பாம்பின் விசத்தை முறிக்க "**வெள்ளை ஆமணக்கு**" தாவரத்தின் மீது புரளும்.

04) மனிதன் – வயிற்றிலுள்ள குடற்புழுக்களை அகற்ற பாகற்காய், வேப்பிலை துவையல் ஆகிவற்றை உட் கொள்ளுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் இயற்கையிலேயே மிகவும் முதன்மையானவை

| | | |
|---|---|---|
| 01) மிக நீளமான நதி | – | நைல்நதி |
| 02) மிகப் பெரிய தீவு | – | கறீன்லாந்து |
| 03) மிகப் பெரிய கண்டம் | – | ஆசியாக்கண்டம் |
| 04) மிகப் பெரிய சமுத்திரம் | – | பசுபிக் சமுத்திரம் |
| 05) மிகப் பெரிய கடல் | – | தென்சீனக்கடல் |
| 06) மிகப் பெரிய பாலைவனம் | – | சஹாரா |
| 07) மிக நீளமான மலைத்தொடர் | – | அந்திஸ் |
| 08) மிக உயரமான மலைச்சிகரம் | – | எவரெஸ்ட் |
| 09) மிகப் பெரிய நாடு | – | ரஷ்யா |
| 10) அதிகமானோர் பின்பற்றும் மதம் | – | கிறிஸ்தவம் |
| 11) அதிகளவு பெற்றோலியம் கொண்ட நாடு | – | சவூதி அரேபியா |
| 12) அதிகளவு சனத்தொகை கொண்ட நாடு | – | சீனா |

## உலகில் மிகவும் சிறியவை

| | | |
|---|---|---|
| 01) உலகில் சிறிய நாடு | – | வத்திக்கான் |
| 02) மிகவும் சிறிய தேசிய கீதம் | – | ஜப்பான் தேசிய கீதம் |
| 03) மிகவும் வறிய நாடு | – | சயர் |
| 04) மிகவும் சிறிய கண்டம் | – | அவுஸ்ரேலியா |

## உலகில் மனிதனால் உருவாக்கப்பட்டவைகளில் முதன்மையானவை

| | | |
|---|---|---|
| 01) மிகவும் உயரமான கோபுரம் | – | சி.என்.கோபுரம் |
| 02) மிகப்பெரிய தேவாலயம் | – | சென்பீற்றர்ஸ் தேவாலயம் |
| 03) மிகப் பெரிய இராணுவம் | – | சீனா |
| 04) மிகப்பெரிய ஜனநாயகநாடு | – | இந்தியா |
| 05) மிகப்பெரிய கம்யூனிச நாடு | – | சீனா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 06) மிகப்பெரிய நூலகம் | – | அமெரிக்க கொங்கிரஸ் நூலகம் |
| 07) மிகப்பெரிய சிலை | – | அமெரிக்க சுதந்திர தேசிய சிலை |
| 08) மிகப்பெரிய நூதனசாலை | – | நியூயோர்க் தேசிய வரலாற்று நூதன சாலை |
| 09) அதிகளவு மக்கள் பேசும் மொழி | – | சீனமொழி (மாண்டரின்) |

## உங்கள் சிந்தனைக்கு

| | | |
|---|---|---|
| மிக மிக நல்ல நாள் | – | இன்று |
| மிக மிக பெரிய வெகுமதி | – | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | – | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | – | சமயோசித புத்தி |
| மிகக் கொடிய நோய் | – | பேராசை |
| மிகவும் சுலபமானது | – | குற்றங்காணல் |
| கீழ்த்தரமான விடயம் | – | பொறாமை |
| நம்பக்கூடாதது | – | வதந்தி |
| ஆபத்தினை விளைவிப்பது | – | அதிகபேச்சு |
| செய்யக்கூடாது | – | உபதேசம் |
| செய்ய வேண்டியது | – | உதவி |
| விலக்க வேண்டியது | – | விவாதம் |
| உயர்வுக்கு வழி | – | உழைப்பு |
| நழுவவிடக்கூடாதது | – | வாய்ப்பு |
| இளமையில் தேவை | – | கல்வி |
| கோபம் வரும் போது காக்க வேண்டியது | – | பொறுமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது விடயங்கள்

## 24மணி நேர அவசர அம்புலன்ஸ் அழைப்பு இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 01) இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் | – | 2561, 9792 |
| 02) சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் | | |
| யாழ்.போதனா வைத்தியசாலை | – | 5599, 3166 |

## அவசர அழைப்புக்கான தொலைபேசி இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 01) யாழ் போதனா வைத்தியசாலை(OPD) | – | 2261 2262 |
| 02) யாழ்.தீயணைக்கும் படை | – | 3556 |
| 03) யாழ்.பொலிஸ்நிலையம் | – | 2222 |
| 04) யாழ்.நீதிமன்றம் | – | 2357 |
| 05) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் | – | 2026 |
| 06) கோலிகுறோஸ் வைத்தியாசலை | – | 2512 |
| 07) மின்சாரசபை (யாழ்ப்பாணம்) | – | 2498, 2609 |
| 08) யாழ் அரச அதிபர் அலுவலகம் | – | 2355 |

# பிறந்தது முதல்குழந்தைக்குப் போடும் ஊசி விபரம்

| | | |
|---|---|---|
| 1ம் நாள் | – | B.C.G |
| 2ம் நாள் | – | D.P.T, POLIO |
| 4ம் மாதம் | – | D.P.T, POLIO |
| 6ம் மாதம் | – | D.P.T, POLIO |
| 9ம் மாதம் | – | Measles+*Vit A* குளிசை |
| 11/2 வயது | – | D.P.T, POLIO+*Vit A* குளிசை |
| 3 வயது | – | MR Vaccine+*Vit A* குளிசை |
| 5 வயது | – | DT, POLIO குளிசை |
| 11–44 வயது | – | Rubbella (பெண்) |
| 10–15 வயதில் | – | (ATD) Rubbella (பெண்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக விருதுகளை அறிவோமா?

01) இங்கிலாந்து நாட்டில் வீரத்திற்காகக் கொடுக்கப்படும் உயர்ந்த பதக்கத்தின் பெயர் **"விக்ரோறியா குரொக்ஸ்"**.

02) அவுஸ்திரேலிய நாட்டின் மிகப்பெரிய விருது **"ஓர்டர் ஒப்நைட"** Order of Knight.

03) ஆசியாவின் நோபல் பரிவு எனப் புகழப்படுவது பிலிப்பைன்ஸ நாட்டின் **"மார்க்சே விருது"**.

04) நைட (முனோபாவ)விருதுகள் இங்கிலாந்தின் மகாராணியுடனும், அவுஸ்ரேலியா, கனடா போன்ற குடியேற்ற நாடுகளுடனும் சம்பந்தப்பட்டவை.

05) திரைப்படத்துறை சார்பான தற்போதுள்ள உயரிய விருது **"ஒஸ்கார்"** Oscar ஆகும்.

06) ரஷ்யாவின் மிகப்பெரிய விருது ஓர்டர் ஒப் லெனின் **"ஓர்டர் ஒப்லெனின்"** Order of Lenin

07) இந்தியாவின் மிகப் பெரிய விருது **"நேரு விருது"**

08) அணுத்துறையில் சிறப்பான பணியாற்றுபவர்களுக்கு வழங்கப் படுவது **"என்றிக்கோபர் மி விருது"** Enrico Fermi Award

09) சிறந்த நூல்களுக்கு வழங்கப்பட்டு வரும் உயர் விருது **"புக்கார்"**

10) பத்திரிகை, சஞ்சிகைத்துறைகளில் சாதனை செய்தோருக்கு வழங்கப்படுவது **"புளிட்சார்"** Pulitzer



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

01) 35 ஆஸ்கார் விருதுகள் பெற்ற ஒரே மனிதர்?
வால்ட் டிஸ்னி

02) கண்ணீர் (புகை) தெரியுமா?
சட்ட விரோதமான கூட்டங்களைக் கலைப்பதற்குக் கண்ணீர்புகை பயன்படுத்தப்படும் இது எதனால் தெரியுமா? குளோரின் வாயு கண்களை அரிக்கும் தன்மையுடையது இவ்வாயு கண்களை அரிப்பதால் கண்ணீர் வருகின்றது

03) கடல்பிராணியான ஆக்டோபசின் ரத்தம் எந்த நிறம் தெரியுமா?
நீலநிறம்

04) தண்ணீரைத் தனது அலகால் உறிஞ்சிக் குடிக்கும் பறவை எது?
புறா

05) கண்கள் இருந்தும் பார்வையில்லாத பிராணி எது?
வௌவால்

06) ஆற்றில் பிறந்து கடலில் வாழும் மீன் எது?
சால்மன் மீன்

## தெரிந்து கொள்ளுங்கள்

### ஆண்டு நிறைவு விழாக்கள்

| | | | |
|---|---|---|---|
| 01ம் ஆண்டு | நிறைவு விழா | – | காகிதவிழா |
| 02ம் ஆண்டு | நிறைவு விழா | – | பருத்தி விழா |
| 03ம் ஆண்டு | நிறைவு விழா | – | தோல் விழா |
| 04ம் ஆண்டு | நிறைவு விழா | – | பூ விழா |
| 05ம் ஆண்டு | நிறைவு விழா | – | மர விழா |
| 06ம் ஆண்டு | நிறைவு விழா | – | இரும்பு விழா |
| 07ம் ஆண்டு | நிறைவு விழா | – | கம்பனி விழா/செம்புவிழா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 08ம் ஆண்டு | நிறைவு விழா | – | வெண்கலவிழா |
| 09ம் ஆண்டு | நிறைவு விழா | – | மண்கலவிழா |
| 10ம் ஆண்டு | நிறைவு விழா | – | தகர விழா / அலுமினிய விழா |
| 11ம் ஆண்டு | நிறைவு விழா | – | எஃகு விழா |
| 12ம் ஆண்டு | நிறைவு விழா | – | லினன் விழா |
| 13ம் ஆண்டு | நிறைவு விழா | – | பின்னல் விழா |
| 14ம் ஆண்டு | நிறைவு விழா | – | தந்த விழா |
| 15ம் ஆண்டு | நிறைவு விழா | – | படிகவிழா |
| 20ம் ஆண்டு | நிறைவு விழா | – | பீங்கான் விழா |
| 25ம் ஆண்டு | நிறைவு விழா | – | வெள்ளி விழா |
| 30ம் ஆண்டு | நிறைவு விழா | – | முத்து விழா |
| 40ம் ஆண்டு | நிறைவு விழா | – | மாணிக்க விழா |
| 45ம் ஆண்டு | நிறைவு விழா | – | நீலக்கல் / இரத்தின விழா |
| 50ம் ஆண்டு | நிறைவு விழா | – | பொன் விழா |
| 55ம் ஆண்டு | நிறைவு விழா | – | மரகத விழா |
| 60ம் ஆண்டு | நிறைவு விழா | – | வைர விழா / மணி விழா |
| 75ம் ஆண்டு | நிறைவு விழா | – | பவளவிழா |
| 80ம் ஆண்டு | நிறைவு விழா | – | அமுத விழா |
| 100ம் ஆண்டு | நிறைவு விழா | – | நூற்றாண்டு விழா |

## சர்வதேச தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 12 | – | தேசிய இளைஞர் தினம் |
| பெப்ரவரி | 14 | – | உலக காதலர் தினம் |
| பெப்ரவரி | 25 | – | கசநோய்த்தடுப்பு தினம் |
| மார்ச் | 08 | – | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 13 | – | சர்வதேச சிக்கன தினம் |
| மார்ச் | 22 | – | சர்வதேச குடிநீர் தினம் |
| மார்ச் | 23 | – | சர்வதேச வானிலை தினம் |
| மார்ச் | 27 | – | சர்வதேச நாடக தினம் |
| ஏப்பிரல் | 01 | – | சர்வதேச முட்டாள் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஏப்பிரல் | 07 | – | சர்வதேச சுகாதார தினம் |
| ஏப்பிரல் | 10 | – | சர்வதேச அன்னையர் தினம் |
| ஏப்பிரல் | 12 | – | சர்வதேச தாதிகள் தினம் |
| ஏப்பிரல் | 22 | – | சர்வதேச பூமி பாதுகாப்பு தினம் |
| ஏப்பிரல் | 23 | – | சர்வதேச புத்தக தினம் |
| மே | 01 | – | சர்வதேச தொழிலாளர் தினம் |
| மே | 02 | – | சர்வதேச பத்திரிகை தினம் |
| மே | 08 | – | சர்வதேச செஞ்சிலுவை தினம் |
| மே | 15 | – | சர்வதேச குடும்ப நல தினம் |
| மே | 17 | – | சர்வதேச தகவல் தொடர்பு தினம் |
| மே | 21 | – | சர்வதேச கலாச்சார பண்பாட்டு தினம் |
| மே | 22 | – | சர்வதேச தேசியவீரர் தினம் |
| மே | 31 | – | சர்வதேச புகையிலை மறுப்பு தினம் |
| யூன் | 05 | – | சர்வதேச சுற்றுச்சூழல் தினம் |
| யூன் | 26 | – | சர்வதேச போதைமருந்து எதிர்ப்பு தினம் |
| யூன் | 27 | – | சர்வதேச நீரிழிவு நோய் தினம் |
| யூலை | 04 | – | அமெரிக்கக் குடியரசு தினம் |
| யூலை | 11 | – | உலக சனத்தொகை தினம் |
| யூலை | 26 | – | சர்வதேச சித்திரவதைக்கு எதிரான தினம் |
| யூலை | 27 | – | சர்வதேச அகதிகள் தினம் |
| ஓகஸ்ட் | 06 | – | சர்வதேச சமாதான தினம் |
| செப்ரெம்பர் | 08 | – | சர்வதேச எழுத்தறிவு தினம் |
| டிசம்பர் | 01 | – | உலக எயிட்ஸ் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்...

பரமனடி சேர்ந்த பாசஜீவனின் செய்தி பகரக்கேட்டு
உடனடியாய் வந்து உதவிகள் செய்தோர்க்கும்,
மரணச்சடங்கில் கலந்துகொண்ட அந்தணர்க்கும்,
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்,
கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாய் அளித்தோர்க்கும்,
மலர் வளையங்கள், மாலைகள் சூட்டியோர்க்கும்,
தொலைவில் இருந்து தொலைபேசி, கடிதத்தினூடாக
இதயமுற துன்பக்கடலில் மூழ்கியோருக்கும்,
அன்பான ஜீவனின் ஆத்மா சாந்திபெற துதித்தோர்க்கும்,
இம்மலரினை அழகுற அச்சிட உதவிய
சுன்னாகம், முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும்,
எமது மனமார்ந்த நன்றியினை
இருகரங்கூப்பித் தெரிவிக்கின்றோம்.


– நன்றி –

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




(★-அமரத்துவம் அடைந்தவர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கின்றதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு
எதை எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகின்றது
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

= பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் =






முத்து பிறின்டேர்ஸ், சுன்னாகம். 077-8038629

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org